**Under Section 173 BNSS**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102146

1. District : மாவட்டம் தஞ்சாவூர் | PS: காவல்நிலையம் V and Ac | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 03 | Date: நாள் 03.08.24

2. (i) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: 106
   (ii) Act சட்டம்: PC Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்: 7, 7A, 8 r/w 12
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 02.08.24 — Date to : நாள் வரை 03.08.24
   Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் 20.45 hrs — Time to : நேரம் வரை 04.45 hrs.
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.08.2024 — Time : நேரம் 10.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம் Registered at 10.45 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 50 km South East.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி Pattukottai Municipality, Kasamkulam, Pattukottai,
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. அய்யம்பெருமாள் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முத்துச்சாமி,
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட திணை அய்வுக்குழு அலுவலர் — (g) Address : முகவரி தஞ்சாவூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. R. Amprasad Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 3/8/2024 [signature] 3/8/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் B.V. நந்தகோபால்
Rank: நிலை D.S.P. No. எண் ……….
V and AC, Thanjavur.

**Thanjavur V&AC Crime Number 03/2024, u/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of PC Act 1988 (as amended in 2018) தொடர்ச்சி**

**பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

இன்று 03.08.2024ஆம் தேதி காலை 10.30மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.M.அய்யம்பெருமாள் அவர்கள் கொடுத்த புகாரைப் பெற்று வழக்கு பதிவ செய்த விபரம் பின்வருமாறு. அனுப்புநர் திரு.M.அய்யம்பெருமாள், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம். பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு தஞ்சாவூர். அய்யா, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் ஆகிய நான ரகசிய தகவலின்படி தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் அலுவலர்களுடன் 02.08.2024ஆம்தேதி இரவு 20.45மணி முதல் 03.08.2024ஆம் தேதி காலை 04.45 மணி வரை பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது கணக்கில் வராத கையூட்டு தொகைகளை வைத்திருந்த (1).நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் என்பவரிடமிருந்து ரூபாய் 5,00,000/- (2).உதவிப்பொறியாளர் திரு.மனோகரன் என்பவரிடமிருந்து ரூபாய் 80,000/- (3).ஒப்பந்ததாரர் திரு.எடிசன் என்பவரிடமிருந்து ரூபாய் 66,000/- மற்றும் (4)டிரைவர் திரு.வெங்கடேசன் என்பவரிடமிருந்து ரூ.8,000/- ஆக மொத்தம் ரூபாய் 6,54,000/-ஐ மேற்படி பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர், உதவிப்பொறியாளர், ஒட்டுனர் மற்றும் ஒப்பந்ததாரர் ஆகியோர்கள் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் கையூட்டாக கேட்டுப் பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும் கணக்கில் வராத கையூட்டு பணம் என்ற சந்தேகத்தின்பேரிலும் திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகசரில் கைப்பற்றப்பட்டது திடீர் சோதனை நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு, இன்று 02.08.2024 ஆம் தேதி மாலை தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவிருக்கும் நகராட்சியின் மாதாந்திர நகர்மன்ற கூட்டத்தில் நகராட்சி ஆணையாளரும், அலுவலர்களும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து கையூட்டு பெறுவதாக, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான M.அய்யம்பெருமாள், வட்டாட்சியர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு சென்று, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்தும், அதன்பின்னர் இன்று 02.08.2024-ந்தேதி வெள்ளிக்கிழமை 18.00 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு, சுமார் 20.40 மணிக்கு பட்டுகோட்டை காசான்குளத்திற்கு எதிரில் அமைந்துள்ள வடக்கு பார்த்த முதல்தளத்துடன் கூடிய மாடிக்கட்டிடத்தில் அமைந்துள்ள பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலகத்தை நானும், திரு.M.குணசேகரன்,

ஆய்வுக்குழு ஆய்வாளர் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால், காவல் ஆய்வாளர் திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர் திரு.M.சரவணன் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பார்ட்டியினர்களுடன் சென்று, அங்கு பணியில் இருந்த பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் திரு.N.குமரன் அவர்களிடமும் மற்றும் அங்கு பணியிலிருந்து அலுவலர்களிடமும் தகவல் தெரிவித்து, திடீர் சோதனை மேற்கொண்டபோது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை விபரம். மேற்படி திடீர் சோதனை 02.08.2024 ஆம் தேதி 20.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலகமானது பட்டுக்கோட்டை காசாங்குளம் தெற்கு கரையில் கிழக்கு மேற்காக அமைந்த சாலையில் வடக்கு பார்த்து அமைந்துள்ள அரசு கட்டிடமாகும். மேற்படி கட்டிடத்தின் முன்புறம் அமைக்கப்பட்டுள்ள போர்ட்டிகோவில் நகராட்சி ஆணையாளருக்காக வழங்கப்பட்ட அரசு வாகனம், நகர்மன்றத் தலைவருக்கு வழங்கப்பட்ட அரசு வாகனம் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு வழங்கப்பட்ட அரசு வாகனம் ஆகியவை நிறுத்தப்பட்டிருந்தது. அலுவலக கட்டிடத்தின் மையப்பகுதியில் அலுவலகத்திற்கு உள்ளே செல்வதற்கான வழி அமைந்துள்ளது. மேற்படி மைய பகுதியில் செல்லும் வழியானது தெற்குவடக்காக அலுவலகத்தை இரண்டாக பிரிக்கும் வகையில் அலுவலகத்தின் பின்புறம் வரை செல்லும் வகையில் நேராக அமைந்துள்ளது. அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு அடுத்து கிழக்கு பகுதியில் நகர்மன்ற தலைவர் அறையும், அடுத்தாற்போல் நகராட்சி பொதுப்பிரிவு மேலாளர் அறையும், அதற்கு கிழக்குப்புறம் கணக்கர் அறையும் காணப்படுகிறது. மேற்படி மேலாளர் மற்றும் கணக்கர் அறைகளுக்கு தெற்கு பகுதியில் நகராட்சி பொதுப்பிரிவு B1, C1, A1, RC, தட்டச்சர், C2, A2, B2 ஆகிய பிரிவுகள் தனித்தனி கேபினாக அமைந்துள்ளது. மேற்படி பொதுப்பிரிவு இருக்கைகளுக்கு அடுத்தாற்போல் தெற்கு பகுதியில் சுகாதாரப்பிரிவு பதிவேடு வைப்பறையும், அதற்கு தெற்கு பகுதியில் நகர நிலஅளவைப் பிரிவு சார் ஆய்வாளர் அறையும், அதற்கடுத்து பிறப்ப இறப்ப பதிவறையும் காணப்படுகிறது. மேற்படி அறைகளுக்கு தெற்கு பகுதியில் அலுவலக கழிவறை காணப்படுகிறது. மேற்படி சார் ஆய்வாளர் அறைக்கு எதிர்புறம் நகரமைப்பு பிரிவு அமைந்துள்ளது. நகரமைப்பு பிரிவில் நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வாளர், உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் இருக்கைகள் காணப்படுகின்றன. அலுவலகத்தின் நுழைவு வாயிலின் மேற்குபுறத்தில் மாடிப்படி அமைந்துள்ளது. மாடிப்படியின் தெற்கு பகுதியில் B2 எழுத்தர் பதிவேடு இருப்பு அறை காணப்படுகிறது. அதற்கு தெற்கு பகுதியில் கணினி திட்ட உதவியாளர் அறை அமைந்துள்ளது. கணினி திட்ட உதவியாளர் அறைக்கு தெற்கு பகுதியில் மேற்சொன்ன

மையபகுதி நடைப்பாதையில் இருந்து வலப்புறம் கிழக்கு மேற்காக ஒரு நடைப்பாதை உள்ளது. அதன் தெற்கில் பொது சுகாதாரபிரிவு, நகராட்சி ஆணையாளர் அறையும், அதனை ஒட்டி மாடிபடியும், அதற்கு தெற்கில் பொறியியல் பிரிவு அலுவலகமும் அமைந்துள்ளது. மேற்படி பொறியியல் அலுவலகத்தில் வடக்குபுறத்தில் நகராட்சி பொறியாளர் அறையும், நகராட்சி பொறியாளர் அறைக்கு அடுத்தாற்போல் Electrical Superintendent, E1 இருக்கையும், அதற்கு எதிர்புறம் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் இருக்கைகள் காணப்படுகிறது. மேற்படி பொறியியல் பிரிவு அலுவலகத்தின் வடகிழக்குபுறத்தில் நகராட்சி உதவிப் பொறியாளர் அறை காணப்படுகிறது. நகராட்சி அலுவலகத்தின பின்புறத்தில் சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

<u>இந்த திடீர் சோதனையின்போது மாவட்டக் ஆய்வுக் குழுவினர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்.</u>

1. திரு.M.அய்யம்பெருமாள், வட்டாட்சியர் மற்றும் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.
2. திரு.M.குணசேகரன், முதுநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சாவூர் மாவட்டம்.
3. திரு.B.V.நந்தகோபால், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
4. திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
5. திரு.M.சரவணன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

<u>இந்த திடீர் சோதனையின்போது பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்தவர்கள்.</u>

1. திரு,N.குமரன், வயது 56/2024, S/o. நல்லமுத்து. நகராட்சி ஆணையாளர், பட்டுக்கோட்டை நகராட்சி, Resi: 147/M 21. ஔவை நகர், துரைமங்களம், பெரம்பலூர்.
2. திரு, P.மனோகரன், வயது 56/24, உதவி பொறியாளர், S/o.R.பரஞ்ஜோதி, 63/64, பாரத் நகர், 4 ரோடு, கும்பகோணம்.
3. திரு.R.வெங்கடேசன், வயது 50/24 S/o.ராஜகோபால், ஆணையாளர் டிரைவர், 176, மேலத்தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
4. திரு.R.விஜயகுமார், வயது 51/2024, த/பெ. P.ராமச்சந்திரன், Town Planning Inspector, பட்டுக்கோட்டை நகராட்சி, <u>இருப்பிடம்:</u> எண்,3/457/5, மேலமொட்டை ரோடு, அசேசம், பட்டுக்கோட்டை.

5. திரு,M.செல்வம், வயது 54/24, த/பெ.முனியன், Electrical Superintendent. Resi: 1/36. சிவஞானபுரம், ஆட்சியர் அலுவலக அஞ்சல். ராமநாதபுரம்.
6. திரு. A.L. நெடுமாறன், வயது 47/24, த/பெ..அழகர்சாமி, துப்புரவு ஆய்வாளர், Resi: 22, சௌந்தர்ராஜா, ஏர்போர்ட் நகர், பாலகிருஷ்ணபுரம், திண்டுக்கல்.
7. திரு.D.சக்திபாலன், வயது 49/24, த/பெ,தட்சிணாமூர்த்தி, உதவியாளர், பட்டுக்கோட்டை நகராட்சி, Resi: T.ஆலை, மணப்பாறை.
8. திரு,அந்தோணி சாக்ரடீஸ், வயது 47/24, த/பெ.தேவதாஸ். துப்புரவு பணியாளர், இருப்பிடம்: 149, நடுத்தெரு, சாந்தநல்லபுரம், கும்பகோணம்.
9. திரு.குமரவேலு, வயது 34/24, த/பெ.சுப்பையா, துப்புரவு பணியாளர், (தற்காலிக இரவு காவலர்), பட்டுக்கோட்டை நகராட்சி. இருப்பிடம்: சூரக்குளம், கொடிமரம் நிறுத்தம், சிவா ஸ்கூல், பட்டுக்கோட்டை.
10. ஐஸ்வர்யா, வயது 25/24, த/பெ, கந்தசாமி, Data Entry Operator, 37, ஹாஸ்பிட்டல் ரோடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.
11. திரு.S.முருகேசன், வயது 59/24, த/பெ. சுப்ரமணியன், குப்பை வண்டி ஓட்டுநர், பட்டுக்கோட்டை நகராட்சி, இருப்பிடம்: SPS நகர், வளவன்புரம், மாட்டுச்சந்தை ரோடு, பட்டுக்கோட்டை.
12. திரு.K.விக்னேஷ், வயது 32/24, த/பெ,கந்தப்பன், Bop Cat Driver, (Contract) Resi: 100/3, திரௌபதி அம்மன் கோயில் தெரு, பட்டுக்கோட்டை.
13. திரு.M.ஜான் எட்வர்ட், வயது 53/24, த/பெ,மைக்கேல், Town Planning Chain Man, பூலாங்கண்ணி, நைனாக்குளம் அஞ்சல், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.
14. திரு.ரெங்கநாதன், வயது 32/24, த/பெ,தனபால், Car Parking Tokken Seller), கீழப்பழஞ்சூர், பிள்ளையார்கோயில் தெரு, பழஞ்சூர்.
15. திரு,மதி.சுஜாதா, வயது 49/24, த/பெ. ஆறுமுகம், க/பெ,ராம்குமார், Typist (Outsourcing) Resi: 107, ஸ்டேட் பேங்க் காலனி, கரிக்காடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர்.
16. திரு.B.அருண்குமார், வயது 37/24 S/o.பாஸ்கரன், 7/4, கோட்டை மெயின் ரோடு, நாமக்கல்.
17. திரு.S.R. பாஸ்கரன், வயது 62/24, S/o.ராமசாமி, 7/4, கோட்டை மெயின் ரோடு, நாமக்கல்.
18. திரு,V.பிரபாகரன், வயது 67/24, த/பெ.வைத்தியநாதன், வழக்கறிஞர், No.2 நாடிமுத்து நகர், பட்டுக்கோட்டை.

மேற்படி நபர்களிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரும் லஞ்ச ஒழிப்பு துறையினரும் தங்களை அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு திடீர் சோதனை செய்யப்பட்டது.

<u>இந்த திடீர் சோதனையின்போது பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அலுவலக அலுவலர்களிடம் சோதனையிட்ட விபரம் பின்வருமாறு.</u>

(1) பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் திரு.N.குமரன் அவர்களை அவரது இருக்கையில் சோதனை செய்ததில் ரூ.1000/- இருப்பதாக அவரது மேல் சட்டை பையிலிருந்து எடுத்து ஆஜர் செய்து, அது அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது அறையான ஆணையாளர் சேம்பரை சோதனை செய்ததில் எந்தவித பணம் காணப்படவில்லை.

(2) அந்த சமயத்தில் ஆணையாளர் அலுவலகம் வந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்த ஒப்பந்ததாரர் திரு.K.எடிசன், த/பெ. காளிதாசன், **Water Supply Maintenance outsourcing**, பட்டுக்கோட்டை நகராட்சி, (இருப்பிட முகவரி: 133, காந்தி நகர், கரிக்காடு, பட்டுக்கோட்டை) என்பவரை விசாரிக்க தான் Electrical Superintendent திரு.செல்வம் அவர்களை பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில் ரூ.66000/- (ரூ500x132) இருந்தது. அவரிடம் அந்த பணத்திற்கு விளக்கம் கேட்க, தன்னிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் சரியான முகாந்திரம் தெரிவிக்காததால் மேற்படி ரூ.66,000/- பணம் மேல் நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இவர் தொடர்பான கோப்புகளை பார்வையிட இன்று இவருக்கு ரூ.264222/- தொகை நகராட்சியில் காசோலையாக வழங்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்தது.

(3) பின்னர் மேற்படி துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.அய்யம்பெருமாள் அவர்களுக்கு கிடைத்த தகவலின்பேரில் ஆணையாளர் திரு.குமரன் அவர்களுடன் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால், காவல் ஆய்வாளர் திரு.M.சரவணன் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பார்ட்டியினர்களுடன் அவரது தற்காலிக தங்கியிருக்கும் பட்டுக்கோட்டை லட்சத்தோப்பில் உள்ள நகராட்சி ஆணையாளர் குடியிருப்பிற்கு சென்று சோதனை செய்ததில் அவரது படுக்கை அறையில் வைத்திருந்த கருப்புநிற லேப்டாப் பேக்கில் ரூ.35,000/- (500x70) இருந்தது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, தனது மருத்துவ செலவிற்காகவும், அவசர தேவைக்காகவும் வைத்துள்ளதாக தெரிவித்தார். பின்னர் ஆணையாளர் திரு.குமரன் மற்றும் பார்ட்டினயிருடன் ரூ.35,000/- உள்ள கருப்புநிற லேப்டாப் பேக்குடன் ஆணையாளர் அலுவலகம் வந்துக் கொண்டிருந்தபோது மேற்படி துணைக் ஆய்வுக்குழு அலுவலர் திரு.அய்யம்பெருமாள் அவர்களுக்கு கிடைத்த தகவலின்பேரில் ஆணையாளர் திரு.குமரன் அவர்களை விசாரிக்க இன்று மதியம்

புதுக்கோட்டை சேர்ந்த ஒப்பந்ததாரர் திரு.கர்ணன் தன்னை நமக்கு நாமே திட்டம் சம்மந்தமாக தனது குடியிருப்பிலும், பின்னர் அலுவலகத்திலும் மரியாதை நிமித்தம் சந்தித்தாக சொன்னார்.

(4) பின்னர் பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அலுவலகம் வந்து சோதனையில் இருந்த காவல் ஆய்வாளர் திருமதி.பத்மாவதி மற்றும் ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.M.குணசேகரன் அவர்களுடன் இணைந்து ஆணையாளர் அலுவலகத்தில் தொடர் சோதனையில் ஈடுபட்டு, திரு.V.மனோகரன், உதவி பொறியாளர் அவர்களை சோதனை செய்ததில் ரூ.4270/-தை எடுத்து ஆஜர் செய்து, அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பொறியியல் பிரிவில் அமைந்துள்ள அவரது அறையினை சோதனை செய்தபோது, அவரது வடக்க பார்த்த மேசையின் வலதுபுற டிராயரிலிருந்த கர்ணன் முத்துபிள்ளை கேண்டீன் என்ற பிரிண்ட் செய்யப்பட்ட கவரில் ரூ.80,000/- (ரூ.500x160) இருந்தது. அந்த பணம் பற்றி கேட்டபோது, புதுக்கோட்டையை சேர்ந்த ஒப்பந்தாரர் கர்ணன் என்பவருக்கு நாடியம்மன்கோவில் குளம் மேம்பாட்டு பணிக்குரிய பில்லை முடித்து கொடுத்ததற்காக பெறப்பட்ட தொகை என்று கூறினார். மேற்படி ரூ.80,000/- கையூட்டு பணம் எனத் தெரியவந்ததால் மேல்நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கவருடன் கைப்பற்றப்பட்டது. மேற்படி உதவி பொறியாளர் திரு.மனோகரன் என்பவரிடம் கையூட்டு தொகை வைத்திருந்தது தொடர்பாக அவரிடம் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(5) பின்னர் ரகசிய தகவலின் அடிப்படையில் பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் திரு.குமரன் அவர்களிடம் வேறு கையூட்டு பணம் ஏதும் உள்ளதாக என்று விசாரிக்க, தான் தனது டிரைவர் திரு.வெங்டேசனிடம் K.V.இல்ல திருமண வரவேற்பு விழா என்ற பிரிண்ட் செய்யப்பட்ட வெளிர் மஞ்சள் நிற துணிப்பையில் ரூ.5,00,000/-யை வைத்து, அதனை Emerald Green நிற Vasavi Traders என்று பிரிண்ட் செய்யப்பட்ட NJX Galaxy என்று எழுத்து பொறிக்கப்பட்ட Travel Bag-ல் வைத்து, நேற்று (01.08.2024) கொடுத்து, அவரது வீட்டில் வைத்துள்ளதாக தெரிவித்தார். உடனே டிரைவர் வெங்கடேசனிடம் இதுபற்றி கேட்டபோது, அவர் என்னிடம் எதுவும் கொடுக்கவில்லை, நான்தான் விஜிலென்ஸை கண்டதும் தன்னிடமிருந்த கையூட்டு பணம் ரூ.8000/-தை Car shed-க்கு கீழ்புறம் உள்ள குப்பை தொட்டிக்கு அருகில் வீசி எறிந்ததாக சொன்னார். உடனே மேற்படி இடத்திற்கு டிரைவருடன் சென்று அவர் வீசி எறிந்த ரூ.8000/-தை அவர் அடையாளம் காட்ட விசாரணைக்காக

நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்னர் ஆணையாளர் திரு.குமரன் அவர்கள் டிரைவர் வெங்கடேசனிடம் நேற்று நான் கொடுத்த ரூ.5,00,000/-யை எடுத்து வா, பொய் சொல்லவேண்டாம் என்று சொன்னார். உடனே ஆணையாளர் திரு.குமரன் மற்றும் டிரைவர் வெங்கடேசன் ஆகியோர்களுடன் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.அய்யம்பெருமாள், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.B.V.நந்தகோபால், காவல் ஆய்வாளர் திரு.M.சரவணன் மற்றும் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு பார்ட்டியினர்களுடன் டிரைவர் வெங்கடேசன் அவர்களின் வீட்டிற்கு செல்லும்போது, வழியில் ஆணையாளர் குமரனின் செல்போன் எண்.7397396238-லிருந்து டிரைவர் வெங்கடேசனின் மனைவி திருமதி.V.வசந்தியின் செல்போன் எண்.9865116067-க்கு சுமார் 10.45 மணிக்கு வெங்கடேசன் போன் செய்து, நேற்று கொடுத்த பேக்கை அப்படியே பிரிக்காமல் எடுத்து வா என்று சொன்னார். அதற்கு டிரைவர் வெங்கடேசனின் மனைவி திருமதி.V.வசந்தி, நான் அண்ணன் வீட்டில் இருக்கிறேன், பேக்கை எடுத்துக்கொண்டு பட்டுக்கோட்டை Head Post office-க்கு வந்துவிடுகிறேன் என்று சொன்னார். போன் கனெக்சன் சரியாக கிடைக்காததால் சுமார் நான்கு தடவை பேசினார். அதன்படி வெங்கடேசன் மனைவி திருமதி.V.வசந்தி அவரது மகளுடன் இருச்சக்கர வாகனத்தில் வந்து, அவரது கணவர் வெங்கடேசனிடம் மேற்சொன்ன Emerald Green நிற Vasavi Traders என்று பிரிண்ட் செய்யப்பட்ட NJX Galaxy என்று எழுத்து பொறிக்கப்பட்ட Travel Bag-யை தொடுத்தார். அந்த பையை ஆணையாளர் குமரன் அவர்கள் பெற்றுக்கொண்டு, பின்னர் மேற்படி பார்ட்டியினருடன் ஆணையாளர் அலுவலகம் வந்து, ஆணையாளர் அறையில் வைத்து ஆணையாளர் திரு.குமரன் மேற்படி டிராவல் பேகை திறந்து, அதிலிருந்த K.V.இல்ல திருமண வரவேற்பு விழா என்று பிரிண்ட் செய்யப்பட்ட வெளிர் மஞ்சள் நிற துணிப்பையில் இருந்து ரூ.5,00,000/-த்தினை எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி கேட்க, கடந்த இருபது நாட்களாக பிளான் அப்ரூவல் மற்றும் ஒப்பந்தாரர்களிடமிருந்து வசூல் செய்த பணம் என்று ஆணையர் தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.5,00,000/-த்தினை மேல் நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆணையாளர் திரு.குமரன் என்பவரிடம் கையூட்டு தொகை வைத்திருந்தது தொடர்பாக அவரிடம் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

(6) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.சு.விஜயகுமார், Town Planning Inspector, பட்டுக்கோட்டை நகராட்சி என்பவரை விசாரித்தபோது தன்னிடமிருந்த

ரூ.1320/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(7) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.M.செல்வம், த/பெ. முனியன் Electrical Superintendent என்பவரை விசாரித்தபோது தன்னிடமிருந்த ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(8) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.A.L.நெடுமாறன், த/பெ. அழகர்சாமி, துப்புரவு ஆய்வாளர் என்பவரை விசாரித்தபோது தன்னிடமிருந்த ரூ.1010/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(9) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.D.சக்திபாலன், த/பெ.தட்சிணாமூர்த்தி, உதவியாளர் என்பவரை விசாரித்தபோது தன்னிடமிருந்த ரூ.980/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(10) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.அந்தோணி சாக்ரடீஸ், த/பெ.தேவதாஸ், துப்புரவு பணியாளர் என்பவரை விசாரித்தபோது தன்னிடமிருந்த ரூ.200/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(11) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.குமரவேலு, த/பெ.சுப்பையா, துப்புரவு பணியாளர் என்பவரை விசாரித்தபோது தன்னிடமிருந்த ரூ.330/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(12) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த (1) திரு.ஐஸ்வர்யா, த/பெ.கந்தசாமி, Data Entry Operator, (2) திரு.S.முருகேசன், த/பெ.சுப்ரமணியன், குப்பை வண்டி ஓட்டுநர், (3) திரு.K.விக்னேஷ், த/பெ.கந்தப்பன், Bopcat Driver, (4)

திரு.ரெங்கநாதன், த/பெ.தனபால் Car Parking Token seller (5)திரு.M.ஜான் எட்வர்ட், த/பெ.மைகேல் மற்றும் (6)திருமதி.சுஜாதா, த/பெ.ஆறுமுகம், Typist (Outsourcing) ஆகியோர்களை விசாரித்தபோது தன்னிடமிருந்த பணம் எதுமில்லை எனத் தெரிவித்தனர்.

(13) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.B.அருண்குமார், த/பெ, பாஸ்கரன், நாமக்கல் மற்றும் திரு.S.R.பாஸகரன், த/பெ.ராமசாமி, நாமக்கல் விசாரித்தபோது, தாங்கள் டெங்கு கொசு ஒழிப்பு ஸ்டிக்கர் ஒட்டுவது சம்மந்தமாக ஆணையாளரை பார்க்க வந்ததாகவும், தங்களிடம் செலவிற்காக பணம் ரூ.4000/- வைத்துள்ளதாக தெரிவித்ததால், அந்தப்பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

(14) மேற்படி ஆணையாளர் அலுவலகத்திலிருந்த திரு.பிரபாகரன், த/பெ.வைத்தியலிங்கம், வழக்கறிஞர் என்பவரை விசாரித்தபோது எனது சொந்த வேலையாக வந்ததாகவும், தன்னிடமிருந்த ரூ.5930/-தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் அவரது சொந்த பணம் என்று தெரிவித்ததால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப்பணம் அவரிடமே திருப்ப ஒப்படைக்கப்பட்டது.

(15) இந்த திடீர் சோதனையில் ஆணையாளர் திரு.குமரன் என்பவரிடமிருந்து ரூ.5,00,000/-ம், உதவி பொறியாளர் திரு.மனோகரன் என்பவரிடமிருந்து ரூ.80,000/-ம், ஒப்பந்ததாரர் திரு.எடிசன் என்பவரிடமிருந்து ரூ.66,000/-ம், டிரைவர் திரு.வெங்கடேசன் என்பவரிடமிருந்து ரூ.8,000/-ம் ஆகியவை கணக்கில் வராத மற்றும் கையூட்டு பணம் என்பதால் ஆக மொத்தம் ரூ.6,54,000/-ஐ மேல்நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

(16) மேற்படி திடீர் சோதனையின்போது கீழ்கண்ட ஆவணங்கள் மேல்நடவடிக்கைக்காக நடவடிக்கைகள் மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

(1) பட்டுகோட்டை நகராட்சி வருகை பதிவேடு-2024 பொது பிரிவு (பக்கம் 1 முதல் 100 வரை)
(2) பொதுபிரிவு வருகை பதிவேட்டின் சுருக்கம் (பக்கம் 1 முதல் 124 வரை)
(3) பட்டுகோட்டை நகராட்சி வருகை பதிவேடு-2024 வருவாய் பிரிவு (பக்கம் 1 முதல் 100 வரை)
(4) வருவாய்பிரிவு வருகை பதிவேட்டின் சுருக்கம் (பக்கம் 1 முதல் 124 வரை)
(5) பட்டுகோட்டை நகராட்சி வருகை பதிவேடு-2024 கணினி பிரிவு (பக்கம் 1 முதல் 100 வரை)
(6) கணினி பிரிவு வருகை பதிவேட்டின் சுருக்கம் (பக்கம் 1 முதல் 124 வரை)

(7) பட்டுகோட்டை நகராட்சி பொறியியல் பிரிவு வருகை பதிவேடு-2024 (பக்கம் 1 முதல் 100 வரை)

(8) பொறியியல் பிரிவு வருகை பதிவேட்டின் சுருக்கம் (பக்கம் 1 முதல் 124 வரை)

(9) Water supply Payment Book (Page No.1 to 100) அதில் பக்கம் எண்.19ல் 02.08.2024-ந்தேதி திரு.K.எடிசன் என்பவருக்கு வழங்கப்பட்ட காசோலை எண்கள்.145595, வழங்கப்பட்ட தொகை ரூ,264222/-.

(10)கோப்பு எண்.1068/2023/இ2 (Page No. 1 to 172).

(11)Measurement Book No.09/24-25, Mr.K.Edison (Page No.1 to 100)

(12)Measurement Book No.127/2023-24, Est.Amt : 2.55 cr. (Page No. 1 to 50)

(13)கோப்பு எண்.2825/இ/2021 (Page No.1 to 362).

(14)2023 - 2024 OUT SOURCIING தனியார் ஒப்பந்த அடிப்டையில் மாத ஊதியம் வழங்கும் பதிவேடு (Page No. 1 to 176).

இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் 03.08.2024 ஆம் தேதி 04.45 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ஆவணம், வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள்/மகஜர் ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். இது குறித்து சட்டப்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். (Sd) M.அய்யம்பெருமாள், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம். Madam, received the complaint on 03.08.2024 at 10.30hrs. found prima facie for the allegation of the complaint. Since the matter is intimated to the SP/CR, V&AC, Chennai obtained permission from the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Crime Number 03/2024, u/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of PC Act 1988 (as amended in 2018) on 03.08.2024 at 10.45hrs (sd) B.V.Nandagopal, DSP, V&AC, Thanjavur.

Madam, The original FIR along with the Complaint, seizure mahazar and statements of accused are sent to the CJM/SJ Court Kumbakonam, other copies sent to the senior officers and concerned Investigation officer.

[signature] 3/8/24

(B.V.NANDAGOPAL)

Deputy Supdt. of Police,
Vigilance and Anti Corruption
THANJAVUR.

<u>Name and address Details of the accused in column Number 7 of the FIR in Thanjavur V&AC Crime Number 03/2024, u/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of PC Act 1988 (as amended in 2018).</u>

1. திரு,N.குமரன், வயது 56/2024, S/o. நல்லமுத்து, நகராட்சி ஆணையாளர், பட்டுக்கோட்டை நகராட்சி, Resi: 147/M 21. ஔவை நகர், துரைமங்களம், பெரம்பலூர்.

2. திரு, P.மனோகரன், வயது 56/24, S/o.பரஞ்சோதி, உதவி பொறியாளர், பட்டுக்கோட்டை நகராட்சி, 63/64, பாரத் நகர், 4 ரோடு, கும்பகோணம்.

3. திரு.R.வெங்கடேசன், வயது 50/24 S/o.ராஜகோபால், நகராட்சி ஆணையாளரின் வாகன ஓட்டுனர், 176, மேலத்தெரு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

4. திரு.K.எடிசன், த/பெ. காளிதாசன், Water Supply Maintenance outsourcing, பட்டுக்கோட்டை நகராட்சி, (இருப்பிட முகவரி: 133, காந்தி நகர், கரிக்காடு, பட்டுக்கோட்டை)

B.V. Nandagopal 3/8/24

(B.V. NANDA GOPAL)

Deputy Supdt. of Police
Vigilance and Anti Corruption
THANJAVUR.